GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No.

**FA6A**

**6019–24**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

CONSTITUTIONAL LAW – II

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. List out the essential features found in a Federal form of Government. Analyse whether Indian Government is Federal form of Government or not?
ஒரு கூட்டாட்சி வடிவம் கொண்ட அரசாங்கத்தில் காணப்படும் முக்கிய மூலக்கூறுகளை பட்டியலிடுக. இந்திய அரசாங்கத்தில் கூட்டாட்சி கூறுகள் உள்ளதா இல்லையா என்பதை பகுத்தாய்வு செய்க.

2. Explain the provisions relating to introduction and passing of ordinary bills under the Indian Constitution.
இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் சாதாரண மசோதாக்களை அறிமுகம் செய்வது மற்றும் நிறைவேற்றம் செய்வது குறித்த சட்டவிதிமுறைகளை விளக்குக.

3. Describe the writs issuing jurisdiction of High Courts in India.
இந்தியாவில் உயர்நீதிமன்றங்கள் பிறப்பிக்கும் நீதிப்பேராணைகளின் அதிகாரவரம்பை விவரி.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the powers and functions of Speaker of House of People.
மக்களவை சபாநாயகரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விளக்குக.

5. Examine the limitations available, while applying the Doctrine of Pleasure in India.
இந்தியாவில் விருப்புரிமைக் கோட்பாட்டினை செயல்படுத்தும் வேளையில், கிடைக்கக்கூடிய வரம்புகளை ஆராய்க.

6. State the procedures for impeachment of the President of India.
இந்திய குடியரசுத் தலைவரை பதவி இறக்கம் செய்வதற்கான நடைமுறைகளை கூறுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்பு எழுதுக :

(a) Residuary Powers

எஞ்சிய அதிகாரங்கள்

(b) Collective Responsibility of Members of Parliament

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டுப்பொறுப்பு

(c) State Emergency

மாநில நெருக்கடி நிலை

(d) Special Leave Petition

சிறப்பு அனுமதி மனு

(e) Doctrine of Repugnancy

முரண்பாட்டுக் கோட்பாடு

(f) Annual Financial Statement

ஆண்டு நிதி அறிக்கை

(g) Inter-State Council

மாநிலங்களுக்கிடையேயான மன்றம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. In the State of Gujarat, the Legislative Assembly of the State was dissolved and President's Rule declared. The political parties in Gujarat demanded to postpone the election of President, until the elections to constitute the new Legislative Assembly in State of Gujarat were completed. Analyse and decide the issue.

குஜராத் மாநிலத்தில், அதனுடைய சட்டமன்றம் கலைக்கப்பட்டு, குடியரசு தலைவரின் ஆட்சி கொண்டுவரப்பட்டது. குஜராத் மாநிலத்தில், புதிய சட்டமன்றத்திற்கான தேர்தல்கள் நடத்தப்பட்டு பணிகள் முடியும்வரை குடியரசுத் தலைவர் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று குஜராத்தில் உள்ள அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்தனர். பகுத்தாய்வு செய்து, சர்ச்சைக்கு முடிவு காண்க.

9. Some Members of Parliament were arrested under Defence of India Rules, 1962, while the Parliament was in session. Decide whether Members of Parliament can seek the Freedom from Arrest as a privilege.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்திய பாதுகாப்பு சட்டவிதிகள், 1962-ன் கீழ் கைது செய்யப்பட்டனர். கைது செய்வதில் சுதந்திரம் என்ற சிறப்புரிமையை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்கமுடியுமா என்பதை முடிவு செய்.

10. State of Rajasthan filed a suit against Union of India for recovery of compensation for loss on account of damage caused to goods despatched through the Indian Railways in a civil court. The Union of India contended that, the suit could be filed before the Supreme Court only under Article 131 of Constitution of India. Decide, whether the contention is correct?

இந்திய இரயில்வே துறை மூலம் அனுப்பப்பட்ட பொருட்கள் சேதமடைந்ததால், இராஜஸ்தான் மாநில அரசு, மத்திய அரசிடம் நஷ்டஈடு கேட்டு, உரிமையில் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தது. மத்திய அரசு மேற்படி வழக்கு, இந்திய அரசமைப்புச் சட்டம், ஷரத்து 131-ன் கீழ் உச்சநீதிமன்றத்தில் மட்டுமே தாக்கல் செய்ய முடியும் என்று எதிர்வாதிட்டது. இந்த வாக்குவாதம் சரியா? என்று முடிவு செய்க.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**FA6B** **6045–24**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

COMPANY LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The Memorandum of Association is the fundamental document of a company." — Explain.

"அமைப்பு முறையேடு என்பது ஒரு நிறுவனத்தின் அடிப்படை பட்டயமாகும்." — விளக்குக.

2. Explain the term "Debenture". State the rights and remedies available to a debenture holder.

"கடனீட்டுப் பத்திரம்" என்னும் சொற்றொடருக்கு விளக்கமளித்து மற்றும் கடனீட்டுப் பத்திரதாரரின் உரிமைகள் மற்றும் தீர்வழிகளையும் குறிப்பிடுக.

3. Explain the different modes of winding up of a company.

நிறுவன கலைப்பு குறித்த பல்வேறு முறைகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the Doctrine of 'Indoor Management'. Point out the exceptions.

'அகநிலை மேலாண்மைக் கோட்பாடு' என்பதனை விளக்கி இவ்விதிக்கான விதிவிலக்குகளை குறிப்பிடுக.

5. Explain the procedure and requisites of valid meetings.

செல்லத்தக்க கூட்டத்தை கூட்டுவதற்கான தேவைகள் மற்றும் நடைமுறைகளைப் பற்றி விளக்குக.

6. Explain the powers of the National Company Law Tribunal to investigate into the affairs of the company.
ஒரு நிறுமத்தின் விவகாரங்களை புலன் விசாரணை செய்யும் தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் அதிகாரங்களை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Government Company
அரசு நிறுவனம்

(b) Independent Directors
தன்னிச்சையான இயக்குநர்கள்

(c) Share Certificate and Share Warrant
பங்குச் சான்றிதழ் மற்றும் பங்குப்பற்றாணை

(d) Transfer of Shares
பங்கு மாற்றம்

(e) Reserve Capital
சேம மூலதனம்

(f) Golden Rule in framing of Prospectus.
திட்ட அறிவிப்பு தயாரிப்பதில் கடைப்பிடிக்க வேண்டிய பொன்விதி

(g) Daimler Co. Ltd. vs Continental Tyre and Rubber Co. Ltd.
டெய்ம்லர் நிறுவனம் எதிர் காண்டினென்டல் டயர் மற்றும் ரப்பர் நிறுவனம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' and 'B' were the only members of a private company. Both die in an accident. The Registrar of Company wants to delete the company from the Register. Can he do so?
'அ' மற்றும் 'ஆ' இருவரும் மட்டுமே ஒரு தனியார் நிறுமத்தின் உறுப்பினர்கள். அவர்கள் இருவரும் ஒரு விபத்தில் இறந்து விடுகின்றனர். நிறுமப் பதிவாளர் அந்நிறுமத்தை நிறும பதிவேட்டிலிருந்து நீக்க விரும்புகிறார். அவர் அவ்வாறு செய்ய இயலுமா?

9. 'A' as an infant was registered as a shareholder in a company. After attaining majority he received dividends from the company. After that the company incurred loss and was wound up. Whether 'A' is liable as contributory.
'அ' என்பவர் தான் இளவராக இருக்கும்போது ஒரு நிறுமத்தில் பங்குதாரராக சேர்ந்தார். அதன் பின் உரிமை வயதை அடைந்தவுடன் நிறுமத்திடமிருந்து தனக்கு சேர வேண்டிய பங்காதாயத் தொகையினைப் பெற்றுக் கொண்டார். பிறகு அந்த நிறுமம் இழப்பால் கலைக்கப்படுகிறது. இங்கு 'அ' பங்களிப்புதாரர் என்ற முறையில் பொறுப்பு உடையவரா?

10. 'B' a proxy of 'S' filed the proxy form in XYZ Co. Ltd. seven days ahead of its Annual General Meeting. Whether it is valid or not?
XYZ என்ற நிறுமத்தின் ஆண்டு பொதுக்கூட்டத்திற்கு 'S' என்ற உறுப்பினருக்குப் பதிலாக 'B' என்பவர் கலந்து கொள்ள பதிலாள் மனு 7 நாட்களுக்கு முன்பாகவே தாக்கல் செய்கிறார். அது செல்லுபடியாகுமா?

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No.

**FA6C**

6043–24

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

LABOUR LAW – I

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define Strike. Discuss how does the Industrial Disputes Act, 1947 regulates strike.

   வேலை நிறுத்தத்தை வரையறை செய்க. 1947 ஆம் ஆண்டு தொழிற்துறை சச்சரவுகள் சட்டம் வேலை நிறுத்தத்தை எவ்வாறு முறைப்படுத்துகிறது என்பதை விவாதிக்கவும்.

2. Discuss the provisions under the Trade Unions Act, 1926 relating to immunity from Civil and Criminal Liability.

   1926ஆம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டத்தில் உள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் பொறுப்பு நிலையிலிருந்து காப்புரிமை பெறுவது குறித்த பிரிவுகளை விவாதிக்கவும்.

3. Discuss the deductions authorised under the Payment of Wages Act, 1936.

   1936ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள பிடித்தங்களை விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the Constitutional validity of Minimum Wages Act, with the help of U.Unichogi v State of Kerala (1962).

   யு. யுனிச்சோகி எதிர் கேரள மாநிலம் (1962) என்ற வழக்கின் உதவியோடு, குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் அரசமைப்பு சட்டத்திற்கு உட்பட்ட செல்லுந்தன்மையை விவாதிக்கவும்.

5. Examine the role of conciliation in settlement of industrial disputes.

தொழிற் தகராறுகளை சுமூகமாக தீர்ப்பதில் சமரசத்தின் பங்கினை ஆய்வு செய்க.

6. Explain the procedure for Certification of Standing Orders.

நிலையாணை விதிகளை சான்றளிப்பதின் நடைமுறைகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Protected Workmen

பாதுகாக்கப்பட்ட தொழிலாளர்கள்

(b) Recovery of money due from the Employer

பணியாண்மையரிடம் இருந்து பணபாக்கியினை வசூலித்தல்

(c) Settlement

உடன்படிக்கை

(d) Need based minimum wage

தேவை அடிப்படையிலான குறைந்தபட்ச ஊதியம்

(e) Publication of award

தீர்வத்தினை பிரசூலித்தல்

(f) Amalgamation of Trade Unions

தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்தல்

(g) Individual Dispute

தனிநபர் தகராறு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mrs. Rani joined service in M/s. Laddu & Co., on 10.11.1992 as a cook. She was promoted as supervisor on 10.12.2000. On 10.11.2022, she was legally retrenched. Her last drawn salary was Rs. 10,000/-. Calculate her eligible retrenchment compensation.

திருமதி. ராணி, M/s. லட்டு & கோ-வில் 10.11.1992ல் சமையற்காரராக பணியில் சேருகின்றார். 10.12.2000ல் அவர் மேற்பார்வையாளராக பணி உயர்வு பெறுகின்றார். 10.11.2022 அன்று அவர் சட்டப்படி ஆட்குறைப்பு செய்யப்படுகின்றார். அவருடைய கடைசியாக பெற்ற ஊதியம் ரூ. 10,000/- ஆகும். அவருக்கு தகுதியுடைய ஆட்குறைப்பு நஷ்ட ஈட்டினை கணக்கிடுக.

9. The draft standing orders submitted by M/S. Kanthan (P) Ltd., was certified by the certifying authority on 12.10.2022. No appeal was filed. On 10.02.2023 the workers filed an application for amendment of the certified standing orders. Decide the appeal.

M/s. கந்தன் (பி) லிட் சமர்பித்த வரைவு நிலையாணை விதிகளை சான்றளிக்கும் அதிகாரி 12.10.22ல் சான்றளிக்கின்றார். மேல் முறையீடு ஏதும் தாக்கல் செய்யயப்படவில்லை. தொழிலாளர்கள் 10.2.2023ல் சான்றிட்ட நிலையாணை விதிகளை திருத்தம் செய்ய மனு செய்கின்றனர். மேல்முறையீட்டினை தீர்மானிக்கவும்.

10. The management of XYZ & Co., imposed a fine of Rs. 1,000/- as punishment for the proved misconducts committed by Mrs. Santhosh. Her monthly wages was Rs. 8,000/-. In her October 2023 salary the entire fine was deducted. She challenged the deduction. Decide.

XYZ & கோ. நிர்வாகம் திருமதி. சந்தோஷ் என்பவர் புரிந்த நிரூபிக்கப்பட்ட ஒழுங்கீனங்களுக்காக ரூ. 1,000/- அபராதம் விதிக்கின்றார்கள். அவருடைய மாத சம்பளம் ரூ. 8,000/- ஆகும். அவருடைய 2023, அக்டோபர் மாத சம்பளத்தில் அபராத தொகை முழுவதுமாக பிடித்தம் செய்யப்படுகின்றது. பிடித்தத்தினை அவர் ஆட்சேபிக்கின்றார். தீர்வு செய்க.

---